<u>தேதி - 04.11.2025</u>

<u>அசல் வழக்கு எண்.11/2020</u>
<u>வா.சா.1 - திருமதி. மாலா</u>

**<u>மனு அனுமதிக்கப்பட்டு மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

காசோலை வழக்கில் எனக்கு வர வேண்டிய தொகைக்கு தனியாகவும், என் கணவருக்கு வர வேண்டிய தொகைக்கு அவர் தனியாகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்த வழக்கையும் தனித்தனியாக தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், சேர்ந்து தாக்கல் செய்துள்ளது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. ஐந்தாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் என் கணவர் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தும், இந்த வழக்கில் நான் அடமானம் கொடுத்ததாக சொல்லப்படும் சொத்தும் ஒன்று தான் என்றால் சரிதான். பிரதிவாதிக்கும் இந்த வழக்கின் வாதிகளான எங்களுக்கும் இந்த வழக்கில் சொல்வதை போல ஏற்பட்ட அடமானகடனை தவிர வேறு எந்த பரிவர்த்தனைகளும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அடமானக்கடன் பெற்ற சமயத்தில் வழக்கில் பெறப்பட்ட காசோலைகள் வாதிகள் இருவர் பெயருக்கு தனித்தனியாக security க்காக கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு ரூ.20,00,000/-க்கு ஒரு காசோலையும், என் கணவர் பெயருக்கு ரூ.20,00,000/-க்கு ஒரு காசோலையும் கொடுக்கப்பட்டது. அடமானக்கடனை இரத்து செய்துதருமாறு கேட்டார், நண்பராக இருப்பதால் நம்பி அடமானக்கடனை இரத்து செய்த பிறகு காசோலையை கொடுத்தார் என்று சாட்சி கூடுதலாக சாட்சியம் அளித்தார். வா.சா.ஆ.2 ஆன செல்இரசீது ஏற்படுத்தும் போது பிரதிவாதி உடன் இல்லை என்றும், சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக அடமான கடன் ஏற்படுத்தும் போது காசோலையை பிரதிவாதி கொடுத்தார் என்றும், அந்த காசோலையை வைத்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால்

சரியல்ல. எனது கணவர் தாக்கல் செய்த வழக்கில் நாங்கள் தோற்றுவிடுவோம் என்ற பயத்தில் தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அடமான சொத்தானது மாநகர எல்கைக்குள் வருவதால் மதிப்பு அதிகம் என்பதாலும், பணத்தினை பெற்றுவிடலாம் என்ற நோக்கத்தில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதிகளாகிய எங்கள் பெயருக்கு ரூ.20,00,000/-, ரூ.20,00,000/- என்று இரண்டு காசோலைகள் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் தொகை ரூ.46,00,000/- வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. கூடுதலாக ரூ.6,00,000/- எந்த வகையில் கோருகிறோம் என்பதற்கு காரணம் எதுவும் வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல, இரண்டு காசோலைகளும் bounce ஆகி வந்ததால் கூடுதலாக கோருகிறோம். ஒரு அடமானகடனுக்காக அதிகமான ஆவணங்களில் கையெழுத்து பெற்று, அதை தவறாக உபயோகம் செய்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2018ம் ஆண்டு ரூ.23,00,000/- என வாதிகள் இருவருக்கும் தனித்தனியாக கொடுத்த காசோலைகள் வசூல் ஆகாமல் திருப்பப்பட்ட போது, அதுகுறித்து வழக்குகள் எதுவும் தாக்கல் செய்தோமா என்றால் தாக்கல் செய்தோம். அவ்வாறு வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், தாக்கல் செய்துள்ளாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ரூ.23,00,000/-க்கான காசோலைக்காக வழக்கு தாக்கல் செய்திருந்தால் வா.சா.ஆ.2 ஏற்படுத்தப்படும் போது பிரதிவாதி வழக்கு காசோலைகளை கொடுத்திருக்கமாட்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஏற்படுத்தும் போது பிரதிவாதி அங்கு இல்லை என்றும், உண்மையில் பணம் கொடுத்து தான் வா.சா.ஆ.2 ஏற்படுத்தப்பட்டது என்றும், பிரதிவாதி இல்லை எனற சூழ்நிலையில் வழக்கு காசோலை கொடுத்து, வா.சா.ஆ.2 ஏற்படுத்தப்பட்டதாக அந்த ஆவணத்தினை பொய்யாக ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி கடன் தொகையை ஏற்கனவே செலுத்திவிட்டார்

என்றும், எனவே பிரதிவாதி எங்களுக்கு எந்தவித தொகையும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஆகவே தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.11.05 10:12:20 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.